# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2011/2012

## (2017 – July/AUGUST)

## EDS - 4113 கல்வி ஆய்வு முறைகள் (Research Methods in Education)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

---

1) அ) பிரயோக ஆய்வுகள் (Applied Research) கொள்கைவகுக்கும் ஆய்வுகள் (Policy Research), அடிப்படைஆய்வு (Fundamental Research or Basic Research) ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக?

(12 புள்ளிகள்)

ஆ) கல்வியல் ஆய்வுகள் முக்கியத்துவமானதென்பதற்கான காரணங்கள் 6 இனைத் தருக?

(06 புள்ளிகள்)

இ) பொதுவான அளவைநிலை ஆய்வின் ஆய்வுச்செயன்முறையை ஒழுங்கான படிமுறையில் தருக?

(07 புள்ளிகள்)

2) அ) ஆய்வு பிரச்சினையொன்றை இனம்காணும் முறையை விளக்கி, இப்பிரச்சினைனைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு (4) காரணிகளை முன்வைக்குக?

(08 புள்ளிகள்)

ஆ) ஆய்வுச் செயற்பாட்டில் இலக்கிய மீளாய்வின் முக்கியத்துவத்தினை விளக்குக?

(08 புள்ளிகள்)

இ)ஆய்வுப் பிரச்சினை, பொது நோக்கம், சிறப்பு நோக்கம், ஆய்வுக்கருவி ஆகியவற்றிற்கிடையிலான தொடர்புகளை விளக்குக?

(09 புள்ளிகள்)

3) அ) வினாக்கொத்து ஒன்றினை அமைக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய எட்டு பண்புகளை சுருக்கமாக விளக்குக?

(08 புள்ளிகள்)

ஆ)அவதானிப்பின் மூன்று முக்கிய முறைகளைச் சுருக்கமாக எடுத்துரைக்குக?

(09 புள்ளிகள்)

இ)நேர்முகம் காணலில் இடம்பெறும் வினாக்களின் பண்புகள் 8 இனை சுருக்கமாக விளக்குக?

(08 புள்ளிகள்)

4) அ) ஆய்வின்போது ஏகவீன குடித்தொகை, பல்லினக் குடித்தொகை பற்றிய ஆய்வு மாதிரியெடுத்தல் நுட்பத்தில் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றதென்பதை விளக்கி, மாதிரியை தெரிவு செய்யும்போது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய 5 விடயங்களை குறிப்பிடுக?

(10 புள்ளிகள்)

ஆ) படிமுறை எழுமாற்று மாதிரி, படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரி ஆகிய மாதிரியெடுப்புகளை சுருக்கமாக விளக்குக?

(06 புள்ளிகள்)

இ)பண்பு ரீதியான, அளவை ரீதியான ஆய்வுகளைப்பற்றி சுருக்கமாக விளக்குக?

(09 புள்ளிகள்)

5) அ) பரிசோதனை முறை ஆய்வில் பரிசோதனைக்குழு, கட்டுப்பாட்டுக்குழு ஆகியவற்றின் செயற்பாடுகளை விளக்குக?

(08 புள்ளிகள்)

ஆ) விஞ்ஞான முறையே ஆய்வில் உய்த்தறிமுறை, தொகுத்தறி முறை ஆகிய அறிவுத்தொகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தை முன்வைக்குக?

(09 புள்ளிகள்)

இ) ஆய்வொன்றில் நம்பகம், தகுதி ஆகிய அம்சங்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை விளக்குக?

(08 புள்ளிகள்)

6) அ) விடய ஆய்வொன்றின் பண்புகள் 5 இனை சுருக்கமாக விபரிக்குக?

(05 புள்ளிகள்)

ஆ) செயல்நிலை ஆய்வினை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்லக்கூடிய சுழற்சிப்படைகளை விளக்குக?

(08 புள்ளிகள்)

இ) செயல்நிலை ஆய்வானது முறை சார்ந்த ஆய்விலிருந்து பல்வேறு அம்சங்களில் வேறுபடுகின்றது. இவ்வகையான வேறுபாடுகளை

i) நோக்கம்

ii) ஆய்வுப்பிரச்சினை

iii) மாதிரித்தெரிவு

iv) தரவுகளின் பகுப்பாய்வு ஆகிய தலைப்புகளில் விளக்குக?

(12 புள்ளிகள்)